# தென்காசி நகர்மன்ற சாதரணக் கூட்டம் 30.11.2022

## மன்றப்பொருள் 1

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் 2022 (வார்டு குழு மற்றும் சபா) குறித்து தமிழ்நாடு அரசால் அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022 மற்றும் அரசாணை (நிலை) எண்93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான எல்லை மற்றும் உள்ளடக்கிய பகுதிகளுக்கான பட்டியலை நகர்மன்ற தீர்மானம் எண்.203, நாள்.21.10.2022ம் தேதிய அவசர கூட்டத்தில் அங்கீரிக்கப்பட்டதை தொடர்ந்து மாவட்ட அரசிதழில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான (வார்டு குழு மற்றும் பகுதி சபா) விதிகள் 2022ன் விதி எண்9ன்படி பகுதி சபாக்களுக்கான எல்லை மற்றும் உள்ளடக்கிய பகுதிகளுக்கான எல்கையினை 28.10.2022ம் தேதி பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. மேலும் விதி எண் 8ல் தெரிவித்துள்ளபடி பகுதிசபா உறுப்பினர்களுக்கான விருப்ப மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள விருப்ப மனுக்கள் அரசு உத்திரவின்படி அமையப் பெற்றுள்ளதால் மேற்படி இணைப்பில் கண்டுள்ளபடி பகுதி சபா உறுப்பினர்களாக படிவம் 2ல் உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1673/2022/எப்1

**தீர்மானம் எண் : 210**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 2

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத்துறை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக்கூட்டு விலைப்பொருட்களை சந்தைப்படுத்த விற்பனை மையம் அமைக்க தென்காசி மவட்டத்தலைவர் அவர்கள் இடஒதுக்கீடு செய்து கொடுக்கும்படி தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் தென்காசி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ளூர் பேருந்து நிற்கும் இடத்தில் அமைந்துள்ள தண்ணீர் தொட்டி அருகில் 10அடி x 10அடி பரப்பளவில் காலி இடத்தில் மேற்படி இடம் தேர்வு செய்யப்பட்டு மாத வாடகையாக ரூ.2600/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தை கொடுப்பது குறித்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று இடஒதுக்கீடு செய்து கொடுக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி காலியிடத்திற்கு வைப்புத்தொகையாக 12 மாத வாடகைக்கு சமமான தொகையினை செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 211**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 3

தென்காசி மாவட்டம்,தென்காசி நகராட்சி பகுதிக்குட்பட்ட வருவாய் கிராமங்களான தென்காசி மற்றும் புலியூர் பகுதிகளை மலையிட பாதுகாப்பு குழும பட்டியலில் அமைந்துள்ளது. மாவட்ட ஆட்சியர் தென்காசி அவர்களின் கடித எண்.ஆ3/296/2022, நாள்.22.09.2022 கடிதத்தில் மேற்படி வருவாய் கிராமங்களை மலையிட பாதுகாப்பு குழும பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தென்காசி நகராட்சி பகுதிக்குட்பட்ட வருவாய் கிராமங்களான தென்காசி மற்றும் புலியூர் பகுதிகளை மலையிட பாதுகாப்பு குழும பட்டியலில் இருந்து நீக்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 212**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 4

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக முதிர் கொசுக்களை கட்டுப்படுத்தும் பைரித்ரம் மற்றும் கொசுப்புழுக்களை ஒழிப்பதற்கான டெமிபாஸ் ஆகிய மருந்துகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :** பைரித்ரம் மற்றும் டெமிபாஸ் மருந்துகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 3.00 (ரூபாய் மூன்று லட்சம் மட்டும் )க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2297/2022/எச்1

**தீர்மானம் எண் : 213**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 5

இந்நகராட்சியில் பணிபுரியும் ஓட்டுநர்கள், தூய்மை பணியாளர்கள், தூய்மைபணி மேற்பார்வையாளர்கள், அலுவலக உதவியாளர்கள், மகப்பேறு உதவியாளர் ஆகியோர்களுக்கு 2022–2023ம் ஆண்டிற்கான சீருடை, காலணிகள் ஆகியவைகள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. சீருடை அரசு சார்ந்த நிறுவனத்திடம் வாங்கவும் மற்ற இனங்களை விலைப்புள்ளி பெற்று வாங்கவும், மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2296/2022/எச்1

**தீர்மானம் எண் : 214**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 6

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் கிருமிநாசினிகள் குறைவான இருப்பில் உள்ளதாலும், மழைக்காலம் தொடங்க உள்ளதாலும், கிருமி நாசினிகள் (பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு ,பினாயில் (கருப்பு) வாசனை பினாயில் , லெமன் கிராஸ் ஆயில்) தேவைப்படுகிறது. மேற்படி கிருமி நாசினிகள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1. மேற்படி கிருமி நாசினிகள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2298/2022/எச்1

**தீர்மானம் எண் : 215**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 7

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான 7வது வார்டு நகராட்சி நடுநிலைப்பள்ளி, 9வது வார்டு நகராட்சி நடுநிலைப்பள்ளி, 13 வது நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிய இடங்களில் (NAPKIN INCINERATOR) அமைக்கவும் , அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/–க்கு ( மூன்று லட்சம் மட்டும் ) கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1. நகராட்சிக்கு சொந்தமான 7வது வார்டு நகராட்சி நடுநிலைப்பள்ளி,9வது வார்டு நகராட்சி நடுநிலைப்பள்ளி, 13 வது நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிய இடங்களில் (NAPKIN INCINERATOR) அமைக்கவும், அதற்கான உத்தேச செலவினத்தினை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 216**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 8

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள TN76F8885 வாகனத்திற்கு தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள 28.10.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | மூஸா இஞ்சினியரிங் ஓர்க்ஸ்,194 தைக்கா தெரு, செங்கோட்டை ரோடு தென்காசி. | ரூ.84800/– |
| 2 | தாதாபீர் மோட்டார் ஓர்க்ஸ், குற்றாலம் மெயின் ரோடு (தாய்பாலா தியேட்டர் எதிரில் ) தென்காசி. | ரூ.88600/– |

| | | |
|---|---|---|
| 3 | றடராஜன் மோட்டார் ஓர்க்ஸ், 1ஏ பழைய பேருந்து நிலைய ரோடு ,தென்காசி. | ரூ.94900/– |

**அ.கு:** மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்டுள்ள�மூஸா இஞ்சினியரிங் ஓர்க்ஸ்,194 தைக்கா தெரு, செங்கோட்டை ரோடு தென்காசி. என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 217**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 9

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தென்காசி நகராட்சிக்கு உட்பட்ட 33 வார்டுகளையும் குப்பையில்லாத நகராட்சி மற்றும் மூன்று நட்சத்திர அங்கீகாரம் அறிவிப்பதற்கு மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்த நிபந்தனைகளின்படி தென்காசி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள வார்டுகளையும் குப்பையில்லாத நகராட்சி (Garbage Free City) மற்றும் மூன்று நட்சத்திர அங்கீகாரம் (3 Star Rating) அறிவிப்பு செய்வதற்கும் அதற்கான செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: வார்டு எண்: 1 முதல் 33 வரை உள்ள வார்டுகளையும் " **(குப்பையில்லாத நகராட்சி மற்றும் மூன்று நட்சத்திர அங்கீகாரம்** star rating) அறிவிப்பு செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க எண்.2305 /2020/ எச்1)

**தீர்மானம் எண் : 218**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 10

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) அரசாணை எண் 145 நாள் 14.10.2022ன்படி தென்காசி நகராட்சி பகுதிகளில் உள்ள 2698 எண்ணம் தெருவிளக்குகளை ஒளிர் உமிழ் விளக்குகளாக(LED) மாற்றம் செய்ய ரூ379.17 இலட்சம் மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (SUIDF)2022- 23ம் ஆண்டு திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட நிதியை இந்நகராட்சிக்கு கடனாக வழங்குவதுடன், இக்கடனை ஆறு ஆண்டுகளுக்குள், ஆண்டிற்கு 5 சதவிகித வட்டியுடன் (5% Per Annum) திரும்ப செலுத்துவதற்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட அரசாணையின்படி இந்நகர் பகுதியில் 2698 எண்ணம் தெருவிளக்குகளை ஒளிர் உமிழ் விளக்குகளாக(LED) மாற்றம் செய்தவற்கான நிதியினை கடனாக தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் பெறுவதற்கும் இக்கடன் தொகையை ஆறு வருடங்களில் ஆண்டிற்கு 5 சதவிகித வட்டியுடன் (5% Per Annum) திரும்ப செலுத்துவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி தெருவிளக்கு திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:415/2020/இ1

**தீர்மானம் எண் : 219**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 11

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 3116/2021/CFC-1 நாள் 14.10.2022ன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக 528 எண்ணம் ஒளிர் உமிழ் விளக்கு(LED) தெருவிளக்குகள் அமைக்க 15வது நிதிக்குழு Untied Grant 2021-22ம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ46.81 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணி மேற்கொள்ள திருநெல்வேலி நகராடசிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக மண்டல செயற்பொறியாளர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி இந்நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:2728/2021/இ1

**தீர்மானம் எண் : 220**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 12

தென்காசி நகராட்சிக்கு மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி SUIFD (State Urban Infrastructure Development Fund) நிதி 2022–23ம் ஆண்டின் கீழ் நகராட்சி பகுதிகளில் ஏற்கனவே உள்ள 2698 தெருவிளக்குகளை ஒளிர் உமிழ் விளக்குகளாக (LED) மாற்றுவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) அரசாணை எண் 145 நாள் 14.10.2022ன்படி ரூ379.17 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 30520/2022/WB நாள் 04.11.2022ல் மேற்படி தொகைக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள விரிவான திட்ட

மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெற சென்னை நகராட்சி நிர்வாக அலுவலக, தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி இந்நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:415/2020/இ1

**தீர்மானம் எண் : 221**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 13

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோக பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டு அதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யவும், தென்காசி நீரேற்றும் நிலையத்தலிருந்து தென்காசி நகர் பகுதிக்குள் பதிக்கப்பட்டுள்ள பிரதான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் கசிவுகளை சரிசெய்யவும் நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேற்படி பணிக்கான ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ளது, எனவே மேற்படி குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்கண்ட குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 222**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 14

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 16 கன்னிமாரம்மன் கோவில் தெருவில் (அருள்மிகு பொன்னம்பலம் நடுநிலைப் பள்ளி அருகில்) உள்ள சிறுபாலம் மிகவும் சேதமடைந்து கழிவுநீர் சரியாக வெளியாக ஆங்காங்கே தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலையில் உள்ளது. மேலும் மழைகாலங்களில் தண்ணீர் வெளியேற்ற முடியாமல் தேங்குகிறது. எனவே அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி சிறுபாலத்தினை சரிசெய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 223**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 15

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 22 உச்சிமாகாளி அம்மன் கோவில் 1ம் தெரு M.M.A நகரில் உள்ள குடியிருப்புகளின் கழிவுநீர் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தினால் சரியாக வெளியேறாமல் ஆங்காங்கே தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலையில் உள்ளது. மேலும் மழைகாலங்களில் தண்ணீர் வெளியேறாமலும் தேங்குகிறது. எனவே அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி இடத்தில் மழைநீர் வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 224**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 16

இந்நகராட்சிக்கு சொந்தமான TN 76 AA3493 ஈப்பு வாகனத்தின் பழுதினை சரிசெய்ய உத்தேச செலவு தொகை ரூ45000/–க்கும் மேற்படி வாகனத்தின் பழுதினை சரிசெய்ய அரசு அங்கீகாரம் பெற்ற திருநெல்வேலி நியூ ஸ்டார் ஆட்டோமொபைல்ஸ் மூலம் பழுது பணிகளை சரிசெய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி வாகனத்தினை திருநெல்வேலி நியூ ஸ்டார் ஆட்டோமொபைல்ஸ் மூலம் பழுதினை சரிசெய்ய மன்றம் அனுமதிக்கலாம்

3 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 225**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 17

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 9 பாறையடித்தெருவில் பழைய மர்கஸ் பள்ளிவாசல் அருகில் உள்ள பொது குடிநீர் குழாய் அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. எனவே தற்போது மேற்படி தெருவில் இருக்கும் பொதுகுடிநீர் குழாயினை அதே வார்டில் KTK கூந்த மில் அருகில் மாற்றம் செய்து பொதுமக்கள் குடிநீர் பெற ஏதுவாக மாற்றியமைக்கும்படி மேற்படி வார்டில் நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பொது குடிநீர் குழாயினை அதனருகில் மாற்றியமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 226**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 18

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள சாலைகள் மிகவும் சேதமடைந்து ஆங்காங்கே பள்ளம் மேடாக உள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளை பேட்ச் ஓர்க் செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 227**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 19

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14கூலக்கடை பஜார் (பொதிகை சில்கஸ் எதிர்புறம்) தெருவில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் சரியாக வழங்க இயலாத காரணத்தினால் அப்பகுதியில் குடிநீர் குழாய் பதித்து குடிநீர் சீராக வழங்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ40000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 228**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 20

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 8உச்சிமாகாளி அம்மன் கோவில் 2ம் தெருவில் உள்ள சமுதாய நலக்கூடம் பழுதடைந்து சுற்று சுவர்களில் ஆங்காங்கே வெடிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்படி கட்டிடத்தினை சுற்றி மண்தளமாக உள்ளதால் கழிவுநீர் தேங்கி சமுதாய நலக்கூடத்திற்கு வந்து செல்லும் பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்படி சமுதாய நலக்கூட கட்டிடத்தினை பராமரிப்பு செய்து மராமத்து பணிகள் மேற்கொள்ளவும், மண்தளத்தினை சிமெண்ட் தளக்கற்கள் பதிக்கவும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 229**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 21

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 8உச்சிமாகாளி அம்மன் கோவில் 2ம் தெருவில் உள்ள பொது குடிநீர் குழாய் அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளது. எனவே மேற்படி தெருவில் உள்ள பொது குடிநீர் குழாயினை அதே வார்டில் உள்ள உச்சி மாகாளி அம்மன் கோவில் 4ம் தெருவில் இடமாற்றம் செய்து அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் குடிநீர் பெற ஏதுவாக மாற்றியமைக்கும்படி மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பொது குடிநீர் குழாயினை உச்சி மாகாளி அம்மன் கோவில் 4ம் தெருவில் மாற்றியமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 230**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 22

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14மேலமுத்தாரம்மன் கோவில் தெருவில் உள்ள பொது குடிநீர் குழாய் அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளது. எனவே மேற்படி தெருவில் உள்ள பொது குடிநீர் குழாயினை அதே தெருவின் சற்று அருகில் இடமாற்றம் செய்து அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் குடிநீர் பெற ஏதுவாக மாற்றியமைக்கும்படி மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பொது குடிநீர் குழாயினை மாற்றியமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 231**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 23

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15ஹரிஹர விநாயகர் கோவில் தெருவில் உள்ள பொது குடிநீர் குழாய் அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளது. எனவே மேற்படி தெருவில் உள்ள பொது குடிநீர் குழாயினை அதே தெருவின் சற்று அருகில் இடமாற்றம் செய்து அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் குடிநீர் பெற ஏதுவாக மாற்றியமைக்கும்படி மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பொது குடிநீர் குழாயினை மாற்றியமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 232**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 24

இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் பணி முடிந்து ஓய்வு எடுக்கவும் மேலும் தங்களது உடமைகளை பாதுகாப்பாக வைக்கவும் இந்நகராட்சிக்கு சொந்தமான மலையான் தெருவில் உள்ள பொதுசுகாதார பிரிவு 2ல் மேற்படி பணியாளர்கள் தங்குவதற்கான ஓய்வு அறை கட்டவும், மேலும் பொதுசுகாதார பிரிவு 4ல் உள்ள சுகாதார அலுவலக கட்டிடம் பராமரிப்பு செய்து மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 233**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 25

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் எதிர்கால நவீன வழியில் கல்வி கற்க, ஏதுவாக நவீன முறையில் கல்வி பயிலும் அமைப்பினை (Smart Class Room) அமைக்க கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | 7வது வார்டு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் INTERACTIVE TOUCH TABLE, LOWLEVEL GREEN BOARD AND SINGLESEATED DESK BENCH அமைத்தல் | 9.90 |
| 2 | 9வது வார்டு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் INTERACTIVE TOUCH TABLE, LOWLEVEL GREEN BOARD AND SINGLESEATED DESK BENCH அமைத்தல் | 9.90 |
| 3 | 13வது வார்டு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் INTERACTIVE TOUCH TABLE, LOWLEVEL GREEN BOARD AND SINGLESEATED DESK BENCH அமைத்தல் | 9.90 |

மேற்கண்டவாறு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடுகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 234**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 26

இந்நகராட்சிக்கு சொந்தமான மத்தளம்பாறை ரோட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (FSTP) உள்ள மின்விளக்குகள் சூரிய ஒளி (Solar Panel) மூலம் ஒளிர ஏதுவாக அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ19.80 இலட்சத்திற்கு மன்ற அனுதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 235**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 27

இந்நகராட்சிக்கு புதியதாக வாங்கப்பட்ட TN 76 AT6381 ஈப்பு வாகனத்திற்கு தேவையான உதிரி பாகங்கள் புதியதாக வாங்கி பொருத்துவதற்கு உத்தேச செலவு தொகை ரூ52000/-க்கும் மேற்படி ஈப்பு வாகனத்தின் அவசர அவசியம் கருதி 17.11.2022 அன்று குறுகிய கால விலைப்புள்ள கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஆஸ்கார் கார் ஜீவலஸ்<br>76/38B புதிய பேரூந்து செல்லும் சாலை<br>இரயில்வே மேம்பாலம் அருகில்<br>தென்காசி | ரூ51350/- |
| 2 | M.ஆல்பர்ட்<br>திருநெல்வேலி ரோடு<br>பாவூர் சத்திரம் | ரூ58500/- |

அ.கு:

1. மேற்படி வாகனத்திற்கு தேவையான உதிரிபாகங்கள் புதியதாக வாங்கி பொருத்த உத்தேச செலவு தொகை ரூ52000/-யை மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட ஆஸ்கார் கார் ஜீவல்ஸின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 236**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 28

தென்காசி நகராட்சியில் நமக்கு நாமே திட்டம்2021-22ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்27519–53/2021/P2 நாள் 17.10.2022ம் தேதியன்று ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 31.10.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 2 புதிய பேரூந்து நிலையம் மற்றும் வார்டு எண் 30 கீழ ரத வீதி (காந்தி சிலை அருகில்) ஆகிய இடங்களில் சிறுமின் கோபுர விளக்கு அமைத்தல் | 8.40 | KEYES Contractors காரைக்குடி<br><br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.03%குறைவு<br><br>2.92%கூடுதல் |
| 2 | வார்டு எண் 29 சுவாமி சன்னதி(கிருஷ்ணா பேக்கிரி அருகில்) மற்றும் சுவாமி சன்னதி (பூக்கடை முக்கு) ஆகிய இடங்களில் சிறுமின் கோபுர விளக்கு அமைத்தல் | 8.40 | KEYES Contractors காரைக்குடி<br><br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.03%குறைவு<br><br>2.92%கூடுதல் |
| 3 | வார்டு எண் 26 கீழப்பாளையம் (RC சர்ச் அருகில்) மற்றும வார்டு எண் 22 உச்சி மாகாளி அம்மன் கோவில் 1வது தெரு ஆகிய இடங்களில் சிறுமின் கோபுர விளக்கு அமைத்தல் | 8.40 | KEYES Contractors காரைக்குடி<br><br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.03%குறைவு<br><br>2.92%கூடுதல் |
| 4 | வார்டு எண் 20 SKP தெரு (வேம்படி பள்ளிவாசல் அருகில்) மற்றும் வார்டு எண் 17 காட்டு பாவா பள்ளி தெரு ஆகிய இடங்களில் சிறுமின் கோபுர விளக்கு அமைத்தல் | 8.40 | KEYES Contractors காரைக்குடி<br><br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.03%குறைவு<br><br>2.92%கூடுதல் |
| 5 | வார்டு எண் 27 அணைக்கரைத் தெருவில் சிறுமின் கோபுர விளக்கு அமைத்தல் | 4.20 | KEYES Contractors காரைக்குடி<br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.03%குறைவு<br><br>2.92%கூடுதல் |

**அ.கு:** மேற்கண்ட பணிகளுக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள காரைக்குடி

KEYES Contractors நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 237**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 29

தென்காசி நகராட்சியில் 15வது நிதிக்குழு (Untied Grant) 2021-22ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 31116/2021/CFC-1 நாள் 13.09.2022தேதியன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 31.10.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | 6000லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் டேங்கர் லாரி வாங்குதல் | 21.12 | M/s Krysttal Motors (P) Ltd. கந்தம்பட்டி, சேலம் | 5.19%கூடுதல் |
| | | | M/s Innovative Engineers முத்துநாயக்கன்பட்டி, சேலம் | 5.61%கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் M/s Krysttal Motors (P) Ltdநிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பிட்டினைவிட குறைவான கூடுதலில் உள்ளது எனவே மேற்படி நிறுவனத்திற்கு விலையினை குறைத்து தருமாறு இவ்வலுவலக கடிதம் ந,க.எண்3517/2020/இ1, நாள் 01.11.2022ல் விலைக்குறைப்பு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. அதனை பெற்றுக்கொண்ட மேற்கண்ட நிறுவனம் 02.11.2022ம் தேதியன்று மதிப்பீட்டினைவிட 0.02%குறைவான விலைவிகிதத்தில் பணியினை மேற்கொள்ள சம்மதக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட திருத்திய் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.02% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கந்தம்பட்டி M/s Krysttal Motors (P) Ltd நிறுவனத்தின் திருத்திய ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 238**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 30

தென்காசி நகராட்சியில் அம்ரூத் 2.0 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள திருநெல்வேலி, மண்டல செயற்பொறியாளர், நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரக அலவலகம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 2841/2021/ஆ1 நாள் 19.09.2022தேதியன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 31.10.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி நகராட்சி சக்தி நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் | 21.80 | திரு P.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 4.75%கூடுதல் |
| | | | திரு. S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர் | 5.97%கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு P.முத்துக்குமார்ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பிட்டினைவிட குறைவான கூடுதலில் உள்ளது எனவே மேற்படி ஒப்பந்தக்காரருக்கு விலையினை குறைத்து தருமாறு இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 896/2022/இ1, நாள் 01.11.2022ல் விலைக்குறைப்பு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. அதனை பெற்றுக்கொண்ட மேற்படி ஒப்பந்தக்காரர் 02.11.2022ம் தேதியன்று மதிப்பீட்டினைவிட 0.02%குறைவான விலைவிகிதத்தில் பணியினை மேற்கொள்ள சம்மதக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட திருத்திய் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

**அ.கு:** 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.02% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருP.முத்துக்குமார் ஒப்பந்தக்காரரின் திருத்திய ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 239**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 31

தென்காசி நகராட்சியில் பொதுநிதி 2022-23ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 220நாள் 17.10.2022தேதியன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 31.10.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையம் வாகன நிறுத்துமிடம் அருகே உள்ள இடத்தில் பாதுகாப்பு அறை மற்றும் காவல்துறைக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் உபயோகமில்லாமல் உள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்துதல் | 2.20 | திருK.நவாஸ்கான் ஒப்பந்தக்காரர்<br>M/s PSR Construction ஒப்பந்தக்காரர் | 0.01% குறைவு<br>2.75% கூடுதல் |

**அ.கு:** மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.01% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருK.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 240**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 32

தென்காசி நகராட்சியில் பொதுநிதி 2022-23ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 151நாள் 09.09.2022தேதியன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 31.10.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் வேகத்தடை அமைத்தல் | 1.00 | திருM.சண்முகவேலு ஒப்பந்தக்காரர்<br>திருM.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.01% குறைவு<br>2.75% கூடுதல் |

**அ.கு:** மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.01% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருM.சண்முகவேலு ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 241**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 33

தென்காசி நகராட்சியில் பொதுநிதி 2022-23ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 186நாள் 17.10.2022தேதியன்று அனுமதி

வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 31.10.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான போகநல்லூர் உரக்கிடங்கில் Bio–Miningக்கு தேவையான இயந்திரங்கள் பொருத்தி இயக்க இரும்பிலான மேற்கூரை அமைத்தல் | 9.90 | திருK.நவாஸ்கான் ஒப்பந்தக்காரர்<br>M/s PSR Construction ஒப்பந்தக்காரர் | 0.03% குறைவு<br>2.75% கூடுதல் |

**அ.கு:** மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.03% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருK.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 242**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 34

தென்காசி நகராட்சியில் பொதுநிதி 2022-23ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 187நாள் 17.10.2022தேதியன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 31.10.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான போகநல்லூர் உரக்கிடங்கில் Bio–Miningக்கு தேவையான இயந்திரங்கள் பொருத்தி இயக்க அடிதளம் (Basement) அமைத்தல் | 9.90 | திருK.நவாஸ்கான் ஒப்பந்தக்காரர்<br>M/s PSR Construction ஒப்பந்தக்காரர் | 0.03% குறைவு<br>2.75% கூடுதல் |

**அ.கு:** மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.03% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருK.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 243**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 35

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 153நாள் 09.09.2022தேதியன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 31.10.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | ஊர்க்காடு தலைமை நீரூந்து நிலையத்திலிருந்து தென்காசி நீரூந்து நிலையம் வரை உள்ள பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யதல் மற்றும் பராமரித்தல் பணி மேறகொள்ளுதல் | 9.90 | திருS.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.19% குறைவு |
| | | | திரு S.சுடலைமுத்து ஒப்பந்தக்காரர் | 5.75% கூடுதல் |

**அ.கு:** மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.19% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருS.முருகன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 244**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 36

தென்காசி நகராட்சிக்கு தமிழ்நாடு நிலையான நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்(TNSUDP) 2020-21ம் ஆண்டின் கீழ் சிப்பம்3ல் உள்ள பணிகளில் குலசேகரநாதர் கோவில் தெரு மற்றும் கீழமுத்தாரம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள தொகை ரூ44.00 இலட்சத்திற்கு அதே வார்டில் உள்ள ஆசாத்நகரில் தார்சாலை அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம்அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 244 அ**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 37

தென்காசி நகராட்சிக்கு சிறப்பு சாலைத்திட்டம்(SRP) 2020-21ம் ஆண்டின்கீழ் சிப்பம்2ல் உள்ள பணிகளில் இரயில்நகரில் தார்சாலை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள தொகை ரூ14.00 இலட்சத்திற்கு அதே வார்டில் உள்ள புதிய பேரூந்து நிலையத்திற்கு எதிர்புறம் உள்ள அன்னை இந்திராநகரில் (அருண்வெங்கடேஷ்லாட்ஜ்பின்புறம்) தார்சாலை அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம்அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 245**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 38

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள் 01.11.2022தேதியன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 31.10.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி நீரூந்து நிலையத்திலிருந்து நகர் பகுதிகளுக்குள் வரை உள்ள பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.80 | திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.10% குறைவு |
| | | | திரு S.சுடலைமுத்து ஒப்பந்தக்காரர் | 4.62% கூடுதல் |

**அ.கு:** மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.10% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருS.முருகன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 246**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 39

தென்காசி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ம் ஆண்டின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வண்ணன்குளம் நீர்நிலையினைரூ32.00இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தநகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (SS&FC)அரசாணை எண்G.O.(4D)No.18 நாள் 21.10.2022 தேதிய அரசாணையின்படி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி திருநெல்வேலி, மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண் நாள் .11.2022ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.அதன்படி கீழ்கண்ட பணிக்கு 22.11.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

1. திரு.K.நவாஸ்கான்
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன்கோவில்
2. M/s PSR Construction.
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன்கோவில்

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் (Technical Bid)கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் (Technical Responsive)24.11.2022ம் தேதியன்று விலைப்புள்ளி (Price Bid)உறை திறக்கப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வண்ணான்குளம் நீர்நிலையினை மேம்படுத்துதல் | 32.00 | திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரர் | 0.01% கூடுதல் |
| | | | M/s PSR Construction ஒப்பந்தக்காரர் | 3.27% கூடுதல் |

மேற்படி விலைப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் தயார்செய்யப்பட்டதில் திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விலைவிகிதத்தைவிட 0.01%குறைவு என்ற விகிதத்தில் உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:** மேற்படி பணிக்கு மதிப்பீட்டினைவிட 0.01%குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 247**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 40

தென்காசி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ம் ஆண்டின் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான TNHB காலனி (L Block) வார்டு B, பிளாக் 4, சர்வே எண் 37, 39, 40, 41 42ல் உள்ள பூங்கா ரூ38.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (SS&FC)அரசாணை எண்G.O.(4D)No.18 நாள் 21.10.2022 தேதிய அரசாணையின்படி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி திருநெல்வேலி, மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண் நாள் .11.2022ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.அதன்படி கீழ்கண்ட பணிக்கு 22.11.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

1. திரு.K.நவாஸ்கான்
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன்கோவில்
2. M/s PSR Construction.
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன்கோவில்

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் (Technical Bid)கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் (Technical Responsive)24.11.2022ம் தேதியன்று விலைப்புள்ளி (Price Bid)உறை திறக்கப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | TNHB காலனி (L Block) வார்டு B, பிளாக் 4, சர்வே எண் 37, 39, 40, 41 42ல் உள்ள பூங்கா மேம்படுத்தும் பணி | 32.00 | திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரர்<br>M/s PSR Construction ஒப்பந்தக்காரர் | 0.01% கூடுதல்<br>4.66% கூடுதல் |

மேற்படி விலைப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் தயார்செய்யப்பட்டதில் திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விலைவிகிதத்தைவிட 0.01%குறைவு என்ற விகிதத்தில் உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:** மேற்படி பணிக்கு மதிப்பீட்டினைவிட 0.01%குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 248**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 41

தென்காசி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ம் ஆண்டின் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான TNHB காலனி உழவர் சந்தை அருகே வார்டு A, பிளாக் 4, சர்வே எண் 212, 213, 214ல் உள்ள பூங்கா ரூ31.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (SS&FC)அரசாணை எண்G.O.(4D)No.18 நாள் 21.10.2022 தேதிய அரசாணையின்படி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி திருநெல்வேலி, மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண் நாள் .11.2022ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.அதன்படி கீழ்கண்ட பணிக்கு 22.11.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

1. திரு.K.நவாஸ்கான்
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன்கோவில்
2. M/s PSR Construction.
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன்கோவில்

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் (Technical Bid)கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் (Technical Responsive)24.11.2022ம் தேதியன்று விலைப்புள்ளி (Price Bid)உறை திறக்கப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | TNHB காலனி உழவர் சந்ததை அருகே வார்டு A, பிளாக் 4, சர்வே எண் 212, 213, 214ல் உள்ள பூங்கா மேம்படுத்தும் பணி | 31.00 | திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரர் | 0.01% கூடுதல் |
| | | | M/s PSR Construction ஒப்பந்தக்காரர் | 3.19% கூடுதல் |

மேற்படி விலைப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் தயார்செய்யப்பட்டதில் திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விலைவிகிதத்தைவிட 0.01%குறைவு என்ற விகிதத்தில் உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:** மேற்படி பணிக்கு மதிப்பீட்டினைவிட 0.01%குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 249**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 42

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் கடைஎண் 38க்கான உரிமத்தினை மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ள 16.11.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியானது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகை/ உரிமத்தின் விபரம் | ஏலக்கேள்வி/ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஏலக்கேள்வி/ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலைய கடை எண் 38 | துரைச்சி 1/4 மாவடி தெரு கடையநல்லூர் | ரூ.8300/- |
| | | ச.வீரமணி 4/59 (1) அண்ணாநகர் குத்துக்கல் வலசை தென்காசி. | ரூ.10100/- |
| | | வீ. அருணோதய 4/5 மெயின் ரோடு ஆராய்ச்சிபட்டி சங்கரன் கோவில். | ரூ.8350/- |

**அ.கு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி கடை எண் 38க்கு மாதவாடகையாக ரூ.10100/ திரு.ச.வீரமணி 4/59(1) அண்ணாநகர் குத்துக்கல்வலசை என்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்கண்ட மாத வாடகையானது தற்போது புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளில் வசூல் செய்யப்பட்டு வரும் மாத வாடகை தொகை ரூ.8050/ த்தினை விட கூடுதலாக உள்ளதால் திரு.ச.வீரமணி என்பவருக்கு கடையினை ஒப்படைப்பு செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2520/2020/அ2

**தீர்மானம் எண் : 250**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 43

இந்நகராட்சி வார்டு எண்.**25**, மாதாங்கோவில் **2**ம் தெருவில் அமைந்துள்ள மதரஸே ரஹ்மான் சிறுவர் சிறுமியர் ஆன்மீக கல்விக்கூடம் சிறுவர் சிறுமியர் கல்வி பயில பயன்படுத்தப்பட்டு வருவதால், அக்கட்டிடத்திற்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டி அதன் நிறுவனத்தலைவர் விண்ணப்பித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.**2467/2022/**அ**1**

**தீர்மானம் எண் : 251**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 44

இந்நகராட்சி வார்டு எண்.**8**, உச்சிமாகாளியம்மன் கோவில் **4**ம் தெருவில் அமைந்துள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ வசதி செய்ய பயன்படுத்தப்பட்டு வருவதால், அக்கட்டிடத்திற்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டி அதன் மருத்துவ அலுவலர் விண்ணப்பித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.**2460/2022/**அ**1**

**தீர்மானம் எண் : 252**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 45

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் உள்ள அம்மா உணவகத்தில் வழங்கப்படும் உணவுகளுக்கு செலுத்தும் தொகைக்கு கணிணி மூலம் இரசீது வழங்கும் இயந்திரம் ஒன்று வாங்க உத்தேச செலவு தொகை ரூ11000/-க்கும் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி 28.10.2022ம் தேதியன்று விலைப்புள்ள கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | எஸ்ஸார் சிஸ்டம்ஸ்<br>26B அம்மன் சன்னதி தெரு<br>தென்காசி | ரூ10800/- |
| 2 | எம்பயர் பிரிண்ட் சர்வீஸ்<br>88 மதினா காம்ப்ளக்ஸ்<br>தென்காசி | ரூ11500/- |

அ.கு: 1 மேற்படி இயந்திரம் வாங்க உத்தேச செலவு தொகை ரூ11000/-யை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட எஸ்ஸார் சிஸ்டம்ஸ் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 253**

அனுமதிக்கப்பட்டது.

நகர்மன்றத்தலைவர்,
தென்காசி நகர்மன்றம்.